நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM — PeoplesDaily — மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 17 [30-03-1993] செவ்வாய்க்கிழமை ஓசை 40

## அடையாள அட்டைக்கு பதில் நிழல் படபிரதி ஏற்கப்படாது

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படுகின்ற க. பொ. த. (சா/த), க. பொ. த. (உ/த) மற்றும் பொதுப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கின்ற பரீட்சார்த்திகள் (பாடசாலைப் பரீட்சார்த்திகள் உட்பட) பரீட்சை எழுதும்போது தமது அடையாளத்தை தகுந்த முறையில் உறுதிப்படுத்தல் அவசியமாகுமென யாழ் பிரதேச கல்வித் திணைக்கள அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். இவர்கள் பரீட்சை எழுதுவதற்கு செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை, கடவுச் சீட்டு, அல்லது தபால் திணைக்கள அடையாள அட்டை போன்ற பரீட்சை ஆணையாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது ஒன்றை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிப்பதன் மூலம் தங்கள் அடையாளத்தை நிருபித்தல்வேண்டும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அங்கிலிக்கன் ஆயருடன் பிக்குகள்
# யாழ். வர பௌத்த பீடங்கள் தடை

## பேச்சு வார்த்தைக்கும் எதிர்ப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சென்று விடுதலைப்புலிகளை மீண்டும் சந்திக்க திட்டமிட்டுள்ள அங்கிலிக்கன் ஆயரின் குழுவில் தமது பீடங்களைச் சேர்ந்த பிக்குகள் பங்குபற்றக்கூடாதென அஸ்கிரிய, மல்வத்த மகாநாயக்க தேரோக்கள் தடைவிதித்துள்ளதோடு, விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் கண்டனம் தெரிவித்துள்ளதாக ஐலன்ட் நாளிதழ் தெரிவிக்கின்றது.

ஆயரின் ஆறு உறுப்பினர் தூதுக்குழுவில் இடம்பெற பௌத்த மதபீடம் விரும்பவில்லை என இப் பீடங்களின் பேச்சாளர்கள் தெரிவித்தனர்.

தாம் யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் சென்று புலிகளின் தலைவர்களை சந்தித்து பேச உள்ளதால் தமது குழுவில் இரு பௌத்த பிக்குகளும் இடம்பெற அனுமதி தரும்படி கோரி ஆயர் கெனத் பெர்னான்டோ இவ்வார ஆரம்பத்தில் மேற்படி இரு பௌத்த பீட மகாநாயக்கர்களுக்கும் தனித்தனி கடிதங்கள் அனுப்பியிருந்தார்.

யாழ். செல்லும் தமது குழுவில் வருபவர்களுக்கு தேவையான போக்குவரத்து, உணவு. தங்குமிட வசதிகளை தாம் ஏற்பாடு செய்வதாகவும் ஆயர் உறுதியளித்திருந்தார்.

ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு ஆதரவான மல்வத்த பீடத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவரையும், எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு ஆதரவான அஸ்கிரிய பீட பிரதிநிதி ஒருவரையும் மற்றும் சட்ட வல்லுனர்கள் சிலரையும், தமது குழுவில் இடம்பெறச் செய்ய ஆயர் பெர்னான்டோ திட்டமிட்டிருந்தார். எனினும் இப்போது தமது பிரதிநிதிகளை அனுப்ப இரு பௌத்த பீடங்களும் மறுத்துவிட்டன.

புலிகளுடன் பேச்சு நடத்த ஆளும்கட்சியும் எதிர்க்கட்சித் தலைவியும் தமது பிரதிநிதிகளை நியமிக்க விரும்பவில்லை என்றும் அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'ஐலன்ட்' மேலும் தெரிவித்தது.

இவ் வருட ஜனவரியில் அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னான்டோ யாழ். வந்து விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. தாம் மீண்டும் வரும்போது பௌத்த மதத் தலைவர்களையும் அழைத்து வருவதாக அப்போது அவர் குறிப்பிட்டிருந்தமை இங்கு சுட்டிக் காட்டப்படத்தக்கது.

## 'குமாரி' இன்று வரும்

ஒருதொகுதி உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் நேற்று முன்தினம் பருத்தித்துறை வந்தடையவிருந்த 'குமாரி' கப்பல் கடலில் ஏற்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக இன்றுகாங்கேசன் துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னர்உடனேயேஇக்கப்பல் பருத்தித்துறைக்கு வரும் எனவும் பொருள்களை இறக்கும் வேலை இன்றே தொடங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அரசை விமர்சிப்பது சட்டபூர்வமானது

### உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

அரசையும், அரசியல் கட்சிகளின் கொள்கைகளையும் விமர்சிப்பது பேச்சுச் சுதந்திரம் மற்றும் அரசியல் யாப்பின் கீழ் அனுமதிக்கப்பட்டது என்று உச்ச நீதிமன்றம் 'ஜன கோஷம்' வழக்கில்தீர்ப்பு வழங்கியுள்ளது.

தீர்ப்பின் பிரதி பொலீஸ்மா அதிபருக்கு அனுப்பப் பட்டுள்ளதாக உச்ச நீதி மன்றப் பிரதிப் பதிவாளர் எம். ஏ. சிறில் தெரிவித்தார்.

உச்ச நீதி மன்றத்தின் இத் தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று சட்ட நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

ஜூலை 1, 1992 இல் இடம்பெற்ற 'ஜன கோஷம்' இயக்கத்தில் ஹொரணைப் பிரதேச சபை உறுப்பினர் டி. அமரதுங்கா (சுதந்திரக்கட்சி) பங்குபற்ற பொலீஸ் தடை செய்தது. அதனை எதிர்த்து அவர் தாக்கல் செய்த வழக்குத் தொடர்பாகவே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

50,000 ரூபா நஷ்டஈடாக அமரதுங்காவுக்கு வழங்கும் படியும் உச்ச நீதி மன்றம் பணித்துள்ளது.

## அரசு மீது சேறு பூசும் கூலி எழுத்தாளர்கள்

### பிரேமதாசா கண்டனம்

அரசாங்கத்தின் மீது சேறு பூச கூலி எழுத்தாளர்களை பத்திரிகை முதலாளிகள் பயன்படுத்துகின்றனர் என்று ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

தேவநம்பிய திஸ்ஸகமையில் நடைபெற்ற பொதுக்கூட்... தெரிவித்தார்.

அத்துடன் ஒரு பத்திரிகை முதலாளி அவரது அக்காவை ஆட்சி பீடம் ஏற்ற முயல்கிறார். மற்ற முதலாளி அதே தலைவரை அத்தலைவர் அம் முதலாளியைப் பார்த்து கேவலம் பிடித்த திருடன் என்று

## ஐரிஷ் கெரிலாக்களை விட புலிகள் திறமையானவர்கள்

### -அனுரா பாராட்டு

"புலிகள் இயக்கம் மிகவும் இலக்குடன் செயற்படும் ஒரு

## கிளாலி – பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் யோ. தமிழ்க் குமரன் அறிவித்துள்ளார்.

## மன்னார் தீவில் ஊரடங்கு

மன்னார் தீவில் நேற்றுக் காலை ஐந்து மணிமுதல் மறு அறிவித்தல் வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## இரு படை பலி

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் கடந்த சனிக்கிழமை சிறிலங்கா இராணுவத்தினர்மீது நடத்திய தாக்குதலில் இருபடையினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## துப்பாக்கி பிரயோகம்

[தொல்புரம்]

வலிமேற்குப்பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமது காவல்

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## கிளாலிக் கடற்பரப்பில் ரோந்து படகிலிருந்து பீரங்கித் தாக்கு

கிளாலி கடற்பரப்பில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான பீரங்கிப் படகிலிருந்து ஆலங்கேணிப் பகுதியை நோக்கி நேற்று அதிகாலை 5 மணியளவில் பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதே ... பகுதியை நோக்கி தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டனர்.

கடற்படையினரின் தாக்குதல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த அதேவேளை ஆலங்கேணி பகுதியிலிருந்து மக்கள்

யில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், அரசாங்கத்தின்மீது சேற்றை அள்ளி வீசுவதற்கு என்றே கூலி எழுத்தாளர்களை இரு பத்திரிகை முதலாளிகள் பயன்படுத்துவதாகவும், இதன் மூலம் வாசகர்களை அவமதிப்பதாகவும் முதலாளியைப் பார்த்து கேவலம் பிடித்த திருடன் என்று கூறியிருந்த போதும் - ஆதரிக்கின்றார். அரசாங்கம் இந்த இரு முதலாளிகளுக்கும் டென்டர்களைக் கொடுக்காததால் ஆத்திரங் கொண்டே இவ்விருவரும் அரசின்மீது சேற்றை வாரி இறைக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

"புலிகள் இயக்கம் மிகவும் இலக்குடன் செயற்படும் ஒரு அமைப்பாகும். ஐரிஷ் குடியரசு இராணுவ கெரிலாக்களை விட இவர்கள் திறமையானவர்கள்" என அநுராபண்டாரநாயக்கா தெரிவித்தார்.

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுவதற்கு முன்பாக நடைபெற்ற அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தில் அவர் கலந்து கொண்டு பேசினார்.

## -அனுரா பாராட்டு

"இலங்கையில் நடைபெறும் உள்நாட்டுப் போர் இரண்டாவது உலகமகா யுத்தத்திற்குப் பின் உலகில் இடம்பெறும் ஒரு நீண்ட உள்நாட்டுப் போராகும். புலிகள் இயக்கத்தை பொறுத்தவரை அவர்கள் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் தாங்கள் விரும்பியவாறு தாக்குதலை தொடுக்க கூடியவர்கள். இதை நாம் மனதில் வைத்து செயற்பட வேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

யளவில் பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதே வேளை கடற்படையினர் ஆலங்கேணி கரையோரப் பிருந்த அதேவேளை ஆலங்கேணி பகுதியிலிருந்து மக்கள் பெருமளவில் கிளாலி நோக்கி பயணம் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. (86)

## விடுதலைப்புலிகள் வழங்கிய

# நல்ல ரக அரிசிக்கு பதில் தரம் குறைந்த அரிசி

விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்ட நல்ல ரக குத்தரிசிக்குப் பதிலாக மிகவும் தரம் குறைந்த அரிசி சில பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளில் வழங்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குழந்தைகளுக்கென விடுதலைப் புலிகளால் விநியோகிக்கப்பட்ட லக்ரோஜன் பால்மா பெப்ரவரி 1994 வரை பாவனைக்கு உகந்ததென்பதும் குறிப்பிடத்தக்கது

கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊடாக விடுதலைப்புலிகளால் வழங்கப்படும் பொருள்களைப் பெற்றுக்கொள்ளும்போது கவனமாக இருக்கும்படி பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# க. பொ. த. (சா/த) பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகும்

1992 - டிசம்பரில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர [சாதாரண] பரீட்சை முடிவுகள் இன்று வெளியிடப்படும். இப்பரீட்சைப் பெறுபேறுகளின்படி 78,505 பேர் உயர்கல்விக்கான தகுதி பெற்றிருப்பதோடு அவர்களில் 690 பேர் 8 பாடங்களில் விசேட சித்தி பெற்றுள்ளனர்.

4,53,802 பரீட்சார்த்திகள் இப் பரீட்சையில் தோற்றியிருந்தனர். இவர்களில் 17.3 சதவீதமானோர் சித்தி அடைந்துள்ளனர். இது கடந்த ஆண்டிலும் 2.2 சதவீதம் அதிகமாகும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

சகல பெறுபேறுகளும் இன்று அனுப்பிவைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# 'சார்க்' நாடுகளின் மாநாடு ஒருநாள் மட்டும் நடைபெறும்

(டாக்கா)

அடுத்த மாதம் பங்களாதேஷ் தலைநகரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள 7ஆவது சார்க் மாநாடு ஒருதினத்திற்கு மட்டுமே நடைபெறக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. சில உறுப்பு நாடுகளும் ஒரு நாள் மாநாட்டையே விரும்புவதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக மாநாடு இரு தினங்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேற்படி சார்க் மாநாடு அயோத்தி பாபர் மசூதி பிரச்சினையால் இரு தடவை ஒத்திவைக்கப்பட்டமை தெரிந்ததே.

# இராணுவ நடவடிக்கைகள் சிறில்ரணதுங்கவால் பாதிப்பு

## அரசசார்பு பத்திரிகை குற்றச்சாட்டு

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இதுவரை பதவி வகித்துவந்த ஜெனரல் சிறில் ரணதுங்க புலிகளுக்கு எதிராக இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு தடையாக இருந்து வந்தார் என அரசசார்பு பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

ரணதுங்க பதவியிலிருந்து வெளியேறும்வரை இவ்வாறு புலி எதிர்ப்பு நடவடிக்கைக்கு எதிர்ப்பாகஇருந்தாராம். இவர் தற்போது அவுஸ்திரேலியாவிற்கான சிறிலங்கா தூதுவராகப் பதவி ஏற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக முன்னாள் விமானப்படைத்தளபதி எயர்வைஸ்மார்ஷல்வோல்டர் பெர்னான்டோ நியமிக்கப்பட்டுள்ளார்என்பது தெரிந்ததே.

# வவுனியாவில் இளம் பெண்கள் இனந்தெரியாதோரால் கடத்தல்

## வவுனியாவில் தமிழர் மத்தியில் பதற்றம்

[வவுனியா]

வெள்ளை நிற வானில் வரும் இனந்தெரியாத ஆயுதக்குழுவினரால் இளம் பெண்களும் கடத்தப்பட்டுள்ளனர்; சில தினங்களுக்கு முன்னர் வவுனியா கூமாங்குளம் என்ற இடத்தில் ஒரு தமிழ் இளம் ஆசிரியையுடன் மேலும் இரு தமிழ்ப் பெண்களும் கடத்தப்பட்டனர்.

தற்போது வவுனியா நகரில் காணாமற் போனோரின் தொகை முப்பதைத் தாண்டி விட்டதாக தகவல் கிடைத்துள்ளது.

மாலை ஆறு மணியுடன் வவுனியா நகரம் ஒய்ந்து போய்விடுகிறது. நகரத்தில் வாழும் மக்கள் மாலையாகி இருள் கவிழ்ந்தவுடன் வீட்டில் கதவுகளைப் பூட்டி மின் விளக்கை அணைத்துக் கொள்கின்றனர். இரவுப் பொழுதுகளில் வானொலியில் நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கு அஞ்சுகின்றனர்.

பாடசாலை செல்வதற்கு தமிழ் மாணவ மாணவிகள் அஞ்சுகின்றனர். இளம் ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டில் அடைபட்டுக் கிடக்கின்றனர்.

தனியார் கல்வி நிறுவனங்களில் கல்விகற்போர் தொகை கணிசமானளவு குறைந்து விட்டது.

வவுனியா நகரமெங்கும்பயம் கௌவியிருப்பதால் அரசாங்க அலுவலகங்கள் யாவும் வெறிச்சோடிப்போய்க்கிடக்கின்றன.

சிங்களவர்களதும் முஸ்லிம்களதும் வர்த்தக நிலையங்கள் மட்டும் வழமை போலவே கலகலப்பாக செயல்படுகின்றன.

தவிர, கிராமப் புறங்களிலிருந்து நகரத்தை நோக்கிச் செல்லும் பொது மக்களின் தொகை மிகவும் குறைந்துள்ளது.

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

# கறுக்காய்தீவில் இரு சடலங்கள் ஒதுங்கின

(தென்மராட்சி)

சிறிலங்கா இராணுவ முகாமை அண்டியபகுதியான கறுக்காய்தீவு என்னும் கடற்கரையோரத்தில் கால்கள், இல்லாத நிலையில் மிகவும் பழுதடைந்த ஒரு சடலம் சென்ற வெள்ளிக்கிழமையில் இருந்து காணப்படுகின்றது. எனினும் இப்பகுதிக்கு சென்று சடலத்தை இனம்காண முடியாததால் சடலத்தை எடுக்க முடியாமல் உள்ளது. இப்பகுதியில் மேலும் ஒரு சடலம் கரையில் காணப்படுவதாகவும் தெரியவருகின்றது. [86]

# தையல் கடையிலிருந்து இராணுவ சீருடை பறிப்பு

ஏறாவூரில் இராணுவத்தினருக்காக தைத்து வைக்கப்பட்டிருந்த 50,000 ரூபா பெறுமதியான சீருடைகள் ஆயுதமேந்திய சிலரால் அபகரித்துச் செல்லப்பட்டது.

செங்கலடி தையல்கடை ஒன்றினுள் இரவு 10.30 மணியளவில் புகுந்த இவர்கள் இராணுவ சீருடைகளை அபகரித்துக்கொண்டு மறைந்து விட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

# திருக்கோணமலையில் பொலிசார் தேடுதல்

திருமலை, உவர்மலை, கண்ணகிபுரம் ஆகிய பகுதிகளில் கடந்த செவ்வாயன்று மாலை பொலிசார் திடீர் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டனர். வீடுவீடாக தேடுதல் நடத்தப்பட்டதுடன் அடையாள அட்டைகளும் பரிசீலிக்கப்பட்டன.

இத்தேடுதலின்போது எவரும் கைது செய்யப்படவில்லை ஜனாதிபதி இடம்பெயர் சேவை நடைபெற்ற பின்னர் திருமலை நகரில் நடாத்தப்பட்ட முதலாவது தேடுதல் நடவடிக்கை இதுவாகும்.

# தமிழ் குழுக்களுடன் பிரட்மன் சந்திப்பு

பாராளுமன்ற தெரிவுக்குழுவிலிருந்து தமிழ்க் கட்சிகள் வெளியேறிவிட்ட நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள இழுபறி நிலையை போக்குமுகமாக ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தமிழ் அரசியல் கட்சிகள், அமைப்புகளை சந்தித்து வருகின்றார்.

தனித்தனியாகவும், கூட்டாகவும் பிரட்மன் இவர்களுடன் பேச்சு நடத்துவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இலவச நிவாரணம் வழங்க ஓய்வூதியர்சங்கம்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்திருக்கும் ஓய்வூதியம் பெறுவோருக்கும் இலவச நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று ஓய்வூதியர் சங்கம் வேண்டுகோள்

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## வரி விளம்பரம்

### ஸ்ரீ லங்கா அச்சகம்

மக்களின் நல்மதிப்பைப் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம் (புத்தகசாலையல்ல) தனது சொந்த இடத்திலேயே (ராஜா தியேட்டர் அருகாமை ஸ்ரீகாந்தா அச்சகவேன்) இயங்கிக் கொண்டிருக்கின்ற தென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! (4563]

### காணவில்லை

வை. ஜீவநாதசர்மாவின் அடையாள அட்டையுடன் (இல. 541711651 V) சிறு கைப்பை ஒன்று யாழ். சோபிதா புத்தகசாலைக்கு முன்பாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சோபிதா புத்தகசாலையிலோ அல்லது ஜோதி எரிபொருள் விற்பனை நிலையம் திருநெல்வேலியிலோ சமர்ப்பிக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

(4590)

### நன்றிஆராதனை

தந்தை சா.ஜே வே. செல்வநாயகம் அவர்களின் 95-வது ஜனன தினத்தை முன்னிட்டு அன்னாரின் வாழ்வுக்காகவும், பணிக்காகவும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஓர் ஆராதனையை யாழ். ஐக்கியகிறிஸ்தவ சங்கம் நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு சுண்டிக்குளி புனிதயோவான் தேவாலயத்தில் நடத்துகின்றது.

### உரையரங்கு

திருவள்ளுவர் மன்றம், நடாத்தும் திங்கள் ஓர் உரையரங்கு வரிசையில் பங்குனித் திங்கள் நிகழ்வு நாளை புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு உரும்பராய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் கலாநிதி ஆ. சின்னத்தம்பி அவர்கள் 'வாழ்க்கைத் தத்துவமும் வள்ளுவமும்' என்னும் பொருளில் உரையாற்றவுள்ளார்.

### கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா வவுனியா தடைமுகாமை அண்டிய பகுதியில் கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகுதி வர்ணப் புகைப்படம் மற்றும் இரண்டு தேசிய அடையாள அட்டை என்பன உள்ளடக்கப்பட்ட பொதி ஒன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து

# இனப்பிரச்சினை என்பதே சிறிலங்காவில் இல்லை

## -இந்தியத் தூதுவரிடம் மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகள்

(கொழும்பு)

சிறிலங்காவில் இனப்பிரச்சினை என்பதே இல்லை. வடக்கு, கிழக்கில் நடப்பதெல்லாம் அரசியல் அதிகாரத்தைப் பெற விரும்பும் ஒரு குழுவினர் ஆயுதப் போர் நடத்துவதே ஆகும் என்று மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களைச் சேர்ந்த மகாநாயக்கர்கள் தம்மைச் சந்தித்த இந்தியத் தூதுவரிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

இந்தியாவிற்கான புதிய தூதுவராக அண்மையில் நியமனம் பெற்றவரான நரேஷ்வர் தயாள் மரியாதை நிமித்தமாக கண்டியிலுள்ள மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களைச் சேர்ந்த றம்புக்வெல சிறி விபஸ்ஸி தேரர், பலிப்பான சிறி சந்தானந்த தேரர் ஆகியோரைச் சென்று சந்தித்தார். இச்சந்திப்பின் போது கண்டியிலுள்ள இந்தியாவின் பிரதித் தூதுவர் ஜே. எஸ் முக்குலும் உடன் சென்றிருந்தார்.

தூதுவர் நரேஷ்வர் தயாள் எழுப்பிய வினாவொன்றிற்கு பதிலளித்த பலிப்பான சிறி சந்தானந்த தேரோ எல்லா இனங்களையும், எல்லா மதங்களையும் சார்ந்த எவரும் நாட்டின் எப்பகுதியிலும் சென்று குடியேறவும், தொழில் செய்யவும, நாளாந்தக் கடமைகளை ஆற்றவும், எந்தத் தடையும் இல்லை. ஆனால் அரசியல் அதிகாரத்தை அடைய விரும்பும் ஒரு குழுவினர்தான் வடக்கு. கிழக்கு பகுதியில் பிரச்சினைகளைத் தோற்றுவித்து வருகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பல தடவைகள் பல கட்சிகள் கூடி ஆராய்ந்த போதும் வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்று வரும்போது தான் சிக்கலாகிறது என்றும் அவர் விளக்கிக் கூறினார்.

இங்கு பேசிய இந்தியத் தூதுவர் எந்தப் பிரச்சினைக்கும் நூறு வீதம் திருப்தி அளிக்கக் கூடிய தீர்வைக் காண்பது இயலாது தான். ஆனால் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம் என்றும் இதற்காக மக்கள் முயற்சிப்பார்கள் என்று நம்புவதாகவும் அவ்வாறில்லாத இடத்து மக்கள் தம் கடமையில் தவறி விட்டவர்களாவர் என்றும், இந்தியா இலங்கையில் அமைதி நிலவுவதையே காண விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

### நடமாடும் வைத்தியசேவை

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து முகாம்களிலும் தனியார் இல்லங்களிலும் தங்கியிருக்கும் தீவகமக்களுக்காக இம்மக்களின் நலன்களைப் பேணுவதற்காக வேலணைப் பிரதேசசபை, நடமாடும் சித்த ஆயுர்வேத வைத்திய சேவை ஒன்றை இம்மக்கள் குடியிருப்புக்கள் அமைந்த இடங்களில் செயலாற்றிவருகின்றது.

இச்சேவை திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில், இல. 75, சந்தோசம் வீதி, அரியாலையிலும், செவ்வாய்க்கிழமை அரியாலை சாம்சன் குடியிருப்பு, நாவலடி டயஸ், மணியரசன் குடியிருப்பு மற்றும் பூம்புகார், யாழ் முஸ்லிம் பகுதி முகாம்களிலும் வியாழக்கிழமை நாவற்குழி லவனிதா குடியிருப்பிலும் இவ்வைத்திய சேவை நடைபெறுவதாகவும் மக்கள் இதனைப்பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனவும் இதன் பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் பொ. சண்முகரத்தினம் ஏ எம் ஓ. அவர்கள் கேட்டுக்கொண்டார்

### பொருள் விநியோகம்

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளில் மாசி மாத கடைசி இரு வாரத்திற்குரிய நிவாரணப் பொருள்களை 31-3-93 க்கு முன் பெற்றுக் கொள்ளுமாறும் 1-4-93 தொடக்கம் பங்குனி மாத முதல் இருவார நிவாரணம் விநியோகிக்கப்படும் எனவும் சங்க பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

### திருக்கல்யாணம்

பருத்தித்துறை சிவன்கோவில் கந்தபுராண திருக்கல்யாணத் திருவிழா கடந்த சனிக்கிழமை வெகு சிறப்பாக இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையினால் நடாத்தப்பட்டது. மறுநாள் தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறைக் கிளையால் அன்னதானம் வழங்கப்பட்டது.(25)

# ஓமந்தை வைத்தியசாலை புனரமைக்க அரசு மறுப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இராணுவம் அற்ற பிரதேசங்களில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கு மருத்துவப் பொருள்கள் மற்றும் உபகரணங்கள், தளபாடங்களை அனுப்பி வைப்பதில் அரசு பாகுபாடு காட்டிவருகிறது.

கிராமப் புறங்களில் அமைந்துள்ள இந்த பிரதேச வைத்தியசாலைகளில் நோயாளர்கள் சிகிச்சை பெறமுடியாமல் திண்டாடுகின்றனர்.

மருந்துப்பொருள்கள் தட்டுப்பாட்டினால் நோயாளர்கள் இறக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஓமந்தை பிரதேச வைத்தியசாலையில் போதிய வைத்தியர் மருத்துவ மாது கூட இல்லை. இந்த வைத்தியசாலையில் வைத்தியர் தங்கும் விடுதியும் வைத்தியசாலைக் கட்டடமும் சேதமடைந்துள்ளது.

இவற்றை புனரமைக்க முடியாது என அரசாங்கம் திட்டவட்டமாக மறுத்துள்ளது, (தி)

# கொள்ளையிட்ட இராணுவம் பொலிசிடம் சிக்கியது

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்று கொள்ளை கோஷ்டி ஒன்றுக்கு தலைவராக செயல்பட்ட முன்னாள் இராணுவத்தினர் ஒருவர் அவரது ஐந்து சகாக்களுடன் பொலிசாரிடம் சிக்கியுள்ளார். அவர்களிடமிருந்து மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன இக்கோஷ்டியைசேர்ந்த மேலும் எட்டுப்பேரைகல்கிசை பொலிசார் தேடி வருகின்றனர்.

மேற்படி நபர் சிங்க ரெஜிமன்டை சேர்ந்தவர் என்றும் மட்டக்களப்பில் கடமையாற்றியபோது இருவருடங்களுக்கு முன் தப்பிச்சென்று தலைமறைவாக இருந்தவர். என்றும் கூறப்படுகின்றது.

# வெலிக்கந்த பகுதிக்கு அமரதுங்க விஜயம்

(கொழும்பு)

சிறிலங்கா மாகாண சபை ... செய்ததாக அரசதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

## 1-வது பிறந்த நாள் வாழ்த்து



## ஓர் முக்கிய அறிவித்தல்

வடமாநில சுருட்டு தயாரிப்பாளர்களுக்கு 31-3-93 (புதன்கிழமை) காலை 8 மணிக்கு சங்க காரியாலயத்தில் தற்போதைய சூழ்நிலையில் சுருட்டு தயாரிப்பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி கூடி ஆராய விருப்பதால் சகல தயாரிப்பாளர்களும் தவறாது சமுகம் தரும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வடமாநிலம்,
சுருட்டு தயாரிப்பாளர்சங்கம்

[4589]

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம்
11-11-1965

வீரச்சாவு
30-03-1986



### வீரவேங்கை ராஜன்

[பொன்னுத்துரை நடேசலிங்கம்]
[கும்புறுப்பிட்டி, திருக்கோணமலை]

கோணமாமலை கும்புறுபிட்டிப் பதிவாழ் மக்கள்
வேணவாக்கொண்டு விடுதலை வேண்டி நிற்க
தான் அவாக்கொண்டு எதிரி தலைகள் தகர்த்த
மானத் தமிழ் ராஜனே நின்புகழ் வாழ்கநீடு

செ. பொன்னுத்துரை -குடும்பத்தினர்
C. S. K. தோட்டம்
கிளாலி
எழுதுமட்டுவாள்.

[4578]

## நினைவு கூருகின்றோம்...

### 1993-03-30

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை - கும்புறுப்பிட்டிக் காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையிலிருந்து தப்புவதற்காக குளத்தில் பாய்ந்தபோது முதலை கடித்ததால் எமைப்பிரிந்த -
ராஜன் (பொன்னுத்துரை நடேசலிங்கம் - கும்புறுப்பிட்டி - திருமலை)

கிளிநொச்சி - பரந்தன் முரசுமோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -
2-ம் லெப். நிமால் (பெர்னான்டோ றோயஸ் சுரேஸ் குமார் - திருநகர் - கிளிநொச்சி)

1987 ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருந்த போது வீரச்சாவெய்திய -
★ ஜெகன் (அன்ரனி எலியான் குரூஸ் - பரப்பாங்கண்டல் - மன்னார்)
★ சங்கர் (முனியாண்டி காமராஜ் - கரிசல் - மன்னார்)

1989 ஆம் ஆண்டு திருக்கோணமடுவில் சிறிலங்கா

...பட்ட போது ஒன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர்கள் வந்து அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

## விநியோக ஏற்பாடு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இடம் பெயர்ந்த மக்களுக்கான புதிய கடை ஒன்றினை செம்பியன்பற்று வடக்கில் திறந்துள்ளது.

அப்பகுதியில் உள்ள இடம் பெயர்ந்தவர்கள் முகாம்களில் தங்கியுள்ள வெற்றிலைக்கேணி கடைக்காடு, ஆழியவளை மக்களுக்கான நிவாரணப் பொருள்கள் அக்கடையின் மூலம் விநியோகிக்கப்பட ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. [36]

## நிறுவைப் படியாக சைக்கிள் அச்சு

(தென்மராட்சி)

கொடிகாமம் மீன்சந்தையில் மீன் வியாபாரிகளின் பொருள்களை நிறுக்க படியாக சைக்கிள் நடு அச்சினை பாவித்து வருகின்றார்கள். இதனால் மககள் நிறைகளைச் சரி பார்த்து வாங்கமுடியாத நிலையில் உள்ளனர். ஆரம்பத்தில் ஒரு சிலர் பாவித்தனர். இப்போது பலரும் அதைப் பாவித்து வருகின்றனர். (86)

## கண்காட்சியும் விற்பனையும்

யாழ் மாநகர சபை 'யுனிசெப்' நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொண்டுள்ள நகர்ப்புற அடிப்படைச் சேவைகள்நிகழ்ச்சிகள்திட்டத்தின் கீழ் இன்று காலை 9 மணிக்குயாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் பனம்பொருள் கைப்பணித் திட்டக் கண்காட்சி— விற்பனையையும், சுகாதாரக் கண்காட்சியையும் ஆரம்பித்து வைக்கவுள்ளது. இக் கண்காட்சி விற்பனை இரு தினங்கள் நடைபெறும். (24)

(கொழும்பு)

சிறிலங்கா மாகாண சபைகள் அமைச்சரும் வெளிவிவகார ராஜாங்க அமைச்சருமான ஜோன் அமரதுங்க வெலிக்கந்த பகுதியில் உள்ள தம்புல்ல, டபுள்கம, செவலப்பிட்டிய ஆகிய எல்லைக் கிராமங்களுக்கு கடந்த வெள்ளியன்று விஜயம் செய்தார்.

இந்தக் கிராமங்களின் பாதுகாப்பு நிலைமைகள் பற்றி அறிந்து கொள்ளும் நோக்குடனேயே அவர் அங்கு விஜயம் செய்ததாக அரசதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

அமைச்சருடன் திரு. ருக்மன் சேனநாயக்கா, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் மகிந்ததர் மசேன, வெலிக்கந்த இராணுவ முகாம் தலைவர் பிரிகேடியர் நன்மொனி, பிரிகேடியர் குலரத்ன. கேணல் பண்டாரதிலக, மேஜர் மகிந்த வீரசூரிய, பொலநறுவ மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் அத்தநாயக்க ஆகியோரும் சென்றிருந்தனர்.

## நிவாரணஉதவிப் பணத்தை அதிகரிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

வடகிழக்கு பகுதிகளில் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு வழங்கப்பட்டுவரும் உலர் உணவு நிவாரண உதவியை 450ரூபாவாக அதிகரிக்கும று சிறிலங்கா மக்கள் காங்கிரஸ் தலைவர் புனர்வாழ்வு அமைச்சர் தயாரத்னவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது இந்த அகதிகளுக்கு வாரம் ஒன்றிற்கு 315 ரூபா வழங்கப்படுவது எவ்விதத்திலும் போதாது. வாழ்க்கைச் செலவு உயர்வை கருத்தில்கொண்டு அகதிகளின் நிவாரண உதவியை 450ரூபாவாக உயர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் காங்கிரஸ் தலைவர் கேட்டுள்ளார்.

## புதிய சந்தைகள்

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணிச் சந்தை, நாகர்கோயில் சந்தை ஆகியவற்றில் நிலவும் இடநெருக்கடியினைத் தீர்க்கும் முகமாக புதிய சந்தை மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (36)

## ஓராண்டு பூர்த்தி

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் இந்து மாமன்றத்தின் ஓராண்டு பூர்த்திவிழா மன்றத்தலைவர் திரு. அருந்தவசீலன் தலைமையில் நடைபெற்றது

இவ்விழாவிற்கு பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரம சுவாமி சித்ருபானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புச்சொற்பொழிவாற்றினார். (யோ)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(தென்மராட்சி

கொடிகாமம் - பருத்தித்துறை (றூட் 759) தனியார் சிற்றூர்தி இயக்குனர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை புதன் கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு கரவெட்டி, ஞானசாரியார் கல்லூரியில் சங்கத்தலைவர் திரு. ஆ. யோகலிங்கம் தலைமையில் இடம்பெறும். இதில் சங்க உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## விசர்நாய் கடித்து நால்வர் மரணம்

(கொழும்புத்துறை)

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் கடந்த இரண்டரை மாதங்களில் மட்டும் விசர் நாய்க் கடியினால் நான்குபேர் மரணமடைந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது (24)

## செல்லத்துரை ஜெயராஜினி

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த செல்லத்துரை தனலக்சுமி தம்பதிகளின் அருந்தவப் புதல்வி ஜெயராஜினி தனது முதலாவது பிறந்த நாளை (30 - 03 - 1993) செவ்வாய் இன்று தனது பொற்பதி வீதி, கொக்குவில் இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்

இவரை அன்பு அப்பா, அம்மா, அண்ணா, அம்மம்மா, அப்பம்மா, அத்தைமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

[4591]


## 613-ம் நாள் நினைவலைகள்

அன்னையின் மடியில்:

06-07-1975

ஈழமண்ணின் மடியில்:

13-07-1991



## செல்லத்துரை ஜெயராஜா

[வீரவேங்கை சிவநாதன்]

காவியமாய் மாறக் காத்திருந்து சென்று
ஓவியமாய் எம்மிடமே மீண்டுகொண்டாயோ?
ஆயிரமாம் யுகங்கடந்து போனாலுமுன் நிழலினொளி
பாயிரமாய் தோன்றும்எம் சிவநாதா போனதெங்கே?

- குடும்பத்தினர்

[4592]

1989 ஆம் ஆண்டு திருக்கோணமடுவில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய -

**மணிவண்ணன்** (கதிர்காமத்தம்பி ஜெயசீலன் -கண்ணன் கிராமம், வாழைச்சேனை - மட்டு )

1991 ஆம் ஆண்டு யாழ் - கீரிமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் குறிவைத்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**மிராண்டா** (பூலோகசிங்கம் உதயன் - மருத்துவமனை வீதி - மன்னார்)

மன்னார் - வேப்பங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். ஜான்** (செபமாலை ஸ்ரான்லி - சிலாவத்தை - முல்லைத்தீவு)

**விஜி** (வேலுப்பிள்ளை பரமேஸ்வரன் - கற்சிலை மடு. ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**குஞ்சன்** (இராமலிங்கம் கமலேஸ்வரன் - சிலாவத்தை - முல்லைத்தீவு)

**துசான்** (இசுதோர் வாஷிங்டன் மோகனராசா -50-ம் படிவம், ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு- முல்லைத்தீவு)

**ரவி** (சுப்பிரமணியம் ஜெயநேசன் -3-ம் வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு)

**நிதி** (வே. பரமேஸ்வரன் - கற்சிலை மடு - முல்லைத்தீவு)

**கண்ணன்** (மாசிலாமணி ராஜேஸ்வரன் - கொக்குத்தொடுவாய் - மணலாறு)

**புனிதன்** (பியசேன விஜயன் - குருக்கலூர் - வவுனியா)

**பைமன்** (மிக்கேல் திவ்வியநாதன் - நடுக்குடா பேசாலை - மன்னார்)

**பொஸ்கோ** (சந்திரன் பத்மநாதன்-முருங்கன்-மன்னார்)

**லெப். அருண்** (கருப்பையா நித்தியானந்தஸ்வரன் - திருவையாறு, கிளிநொச்சி)

**லெப். யேசு** (செபஸ்தியான் யோசப் அன்ரனி - உப்பளம், ஆனையிறவு)

**பைரவி** (நாகேந்திரன் சதீஸ்குமார் - நெடுந்தீவு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி 6289)

நல்லூர் இணை நூலகம்
மாநகர... மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

வாழ்க்கையில் வஞ்சகம் அனைத்தும், பொய்யை நடைமுறையாக்கி உண்மைக்கு மாறானதைச் சொல்லிலிருந்து பொருளில் பாய்ச்சுவதல்லால் வேறில்லை.

- ராபர்ட் ஸ்வத்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 30-03-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# இன்னும் திருந்தவில்லை

இலங்கையில் பல வருடங்களாக நிலவி வரும் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியற் தீர்வு உடன் காணப்பட வேண்டும். இன்றேல் நாட்டின் அரசியல் பொருளாதார நிலை படுமோசமான கட்டத்தை அடையும்என உலகின் பல பாகங்களில் இருந்தும், உள்நாட்டில் இருந்தும் பல வற்புறுத்தல்கள் அரசிற்கு எழுந்துள்ள இவ்வேளையில் மல்வத்தஅஸ்கிரியப் பீடாதிபதிகள் இலங்கையில் வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்திற்குப் புதிய விளக்கம் ஒன்றைக் கொடுத்துள்ளனர்.

"இலங்கையில் இனப்பிரச்சினை என்பதே இல்லை. வடக்கு - கிழக்கில் நடப்பவையெல்லாம் அரசியல் அதிகாரத்தைப் பெற ஒரு குழுவினர் விரும்பியதனால் எழுந்ததே இவ் ஆயுதப்போர்". இதுவே ஆயுதப் போராட்டம் தொடர்பாக மகாநாயக்க தேரோக்கள் தற்பொழுது கொடுத்துள்ள புதியவிளக்கமாகும். அண்மையில் இலங்கைக்கான இந்தியத் தூதுவராக நியமனம் பெற்ற நரேஷ்வர் தயாள் சர்மா மரியாதை நிமித்தம் மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்தபோதே அவர்கள் இவ்வாறு கூறியுள்ளனர்.

அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளின் இக் கூற்றானது பௌத்த பேரினவாதத்தின் மன உணர்வினின் பாற்பட்டதாகும். இலங்கையில் ஆங்கிலேயர் வெளியேறியதில் இருந்து படிப்படியாக உருப்பெற்று. இன்று அணைக்க முடியாத நெருப்பாகக் கொழுந்து விட்டெரியும் இனப்பிரச்சினையை வெகு சுலபமாக மகாநாயக்க தேரோக்கள் தூக்கி எறிந்துள்ளனர். இலங்கையின் சுமார் 45 வருட காலத்தின் அரசியல் வரலாற்றை முற்றாகப் புறம் தள்ளியுள்ளனர்.

இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்து விடுபட்ட பின்னர் இனப்பிரச்சினை தொடர்பாக ஏற்பட்ட உடன்பாடுகள், வட்டமேசை மாநாடுகள், சர்வகட்சிக் கூட்டங்கள், பாராளுமன்றத் தெரிவுக்குழு என இனப்பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகள், முடிவுகள் எவையும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எதையும் காணவில்லை. இதற்கும் மேலாக இனப்பிரச்சினை

# உள்ளூர் உற்பத்தியும் நிறை உணவும்

காபோவைதரேற்று புரதம், கொழுப்பு, உயிர்ச்சத்துக்கள், கனியுப்புகள் என்பவற்றை தேவையான அளவில் கொண்ட உணவு நிறை உணவு (Balanced diet) எனப்படும்.

55 சராசரி கி.கி.உடல்நிறை உடைய ஓர் ஆணுக்கு 3055 கிலோ கலோரி சக்தி 1 நாளைக்கு தேவைப்படுகிறது. இதில் வளர்முக நாடுகளாகிய இலங்கை போன்ற தேசங்களில் உள்ளவர்கள் 65-70வீதம் சக்தியை அதாவது காபோவைதரேற்று உணவில் இருந்தும் 15வீதம் சக்தியை புரத உணவில் இருந்தும், மிகுதி 15வீதம் சக்தியை கொழுப்பு உணவில் இருந்தும் பெறுகிறார்கள்.

நமது மக்கள் காபோவைதரேற்று உணவாக தானிய வகைகளாகிய (Cereals) அரிசி, கோதுமை, சோளம், என்பவற்றையும் மரவள்ளி, வற்றாளை, உருளைக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகளையும் உட்கொள்கிறார்கள். எமது நாட்டில் நாம் அரிசியை மிக பிரதான காபோவைதரேற்று உணவாக தானியவகைகள் மிகவும் சக்தி நிறைந்த உணவாகும். தானியவகைகளில் காணப்படும் சத்தின் அளவு அத்தானிய வகை பயிரிடப்பட்ட நிலத்தின் தன்மையில் சுவாத்தியம் (Climate) அவ் பயிரிற்கு பிரயோகிக்கப்பட்ட உரத்தின்தன்மை என்பவற்றில் தங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பயிரிடப்படும் நாட்டரிசியை எடுப்போமாயின் அதில் 60—75 வீதம் மாப்பொருளும், 6.5 — 14 வீதம் புரதமும், 1—5 வீதம் இலிப்பிட்டுகள் காணப்படுகின்றது. இதைவிட விற்ரமின் பீ கூட்டு தயமின், இரைபோவினோவின், நிக்கொட்டினிக் அமிலம், கனியுப்புக்களும் இவ்விற்ரமின்கள் மற்றும் புரதம் அரிசியின் வெளியுறையில் காணப்படும் சத்து இதை பதனிடும் போது குறைக்கப்படுகிறது. தவிடு நீக்கிய அரிசியில் விற்ரமினின் அளவு மிகவும் வெகுவாக குறைக்கப்படும். யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் விலைவாசி உயர்வு காரணமாக பங்கீட்டுக்கு வழங்கும் வெள்ளை அரிசியை தமது பிரதான காபோவைதரேற்று உணவாக உட்

இலங்கையில் பல பகுதிகளில் பயிரிடப்படுகிறது. மரவள்ளியை தொடர்ச்சியாக பயிரிடுதலால் நிலவளம் குறையும் இதனால் விளைச்சல் குறையும் தொடர்ச்சியாக பயிரிடும் போது நிலத்திற்கு பசளையிடுதல் இன்றியமையாதது.

உருளைக்கிழங்கு தற்போது யாழ்ப்பாணம். கிளிநொச்சி போன்றவற்றில் பயிரிடப்படுகின்றது என்றாலும் விளைவு குறைவாக இருப்பதால் இதன் விலை மரவள்ளிக்கிழங்குடன் ஒப்பிடும்போது 5 - 6 மடங்காக உள்ளது. உருளைக் கிழங்கு 70 — 80 வீதம் நீர், காபோவைதரேற்று 20 வீதம் புரதம் 1—2வீதம் கனியுப்பாக பொட்டசியம், வைட்டமின் என்பவற்றை கொண்டுள்ளது. உருளைக்கிழங்கு 70-90கிலோ கலோரி சக்தியை வழங்குகிறது. இவ் உருளைக்கிழங்கு இலகுவில் சமிபாடு அடைவதனால்இதுசிறுபிள்ளைகட்கும் நோயாளிகட்கும் கொடுக்கப்படலாம்.

மரவள்ளி உடன் பார்க்கும் போதுஉருளைக்கிழங்குசத்துக் கூடிய உணவாகும். ஆகவே இதன் பயிரிடுதலைக் கூட்டி விளைச்சலைக் கூட்டினால் விலைவாசிகுறைக்கப்படலாம். வறியமக்கள் மரவள்ளிக் கிழங்கிற்குப்பதிலாக உருளைக்கிழங்கை உட்கொள்ளலாம். நிறை உணவின்அடுத்தகூறாககொழுப்பு அமையும் எமது நாட்டில் கொழுப்பு உள்ள உணவு குறைந்த அளவில் உட்கொள்ளப்படுகிறது (50g/dil) இதில் 35g கொழுப்பு தேங்காயில் இருந்து பெறப்படும். பொதுவாக யாழ்ப்பாண வாசிகள் தமது 3நேர உணவிலும் தேங்காயை சேர்க்கிறார்கள். இந்த தேங்காயில் காணப்படுவது

யளவு நேரம் நீரில் ஊறவிடுதல், கடலை போன்றவற்றின் மேற்தோலைநீக்குதல், நீண்ட நேரம் அவித்தல் போன்ற முறைகளினால்நீக்கலாம்.

இவ்அவரைக்குடும்ப தாவரங்கள் வளிமண்டல நைதரசனை மண்ணில் பதிப்பதால் மண்ணில் வளம் பெருகும். இதை சுழற்சிமுறை பயிர்ச்செய்கைக்கு கமக்காரர் பயன்படுத்துகிறார்கள். இவ் அவரைக் குடும்ப தாவரங்கள் பயிரிடுவதற்கு தேவையான நீரின் அளவு குறைவாக இருப்பதால் இவற்றை வரண்டகாலத்திலும் பயிரிடலாம். ஆகவே இவற்றின் பயிர்ச்செய்கையை யாழ்ப்பாணத்தில் கூட்டலாம். நிலக்கடலை 45 வீதம் கொழுப்பை கொண்டுள்ளது. சோயா 20 வீதம் கொழுப்பை கொண்டுள்ளது. இவற்றில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய், உதாரணம் சோயா எண்ணெய் நிரம்பாத கொழுப்பமிலங்களை Oleic acid, (Linolecic acid, Linolenicacid) கொண்டுள்ளதால் சத்துக்கு உகந்ததாகும்.

இவற்றைவிட அகத்தி எனப்படும் அவரைக்குடும்ப தாவரம் தற்போது இலங்கையில் வெகுவாக பயிரிடப்படுகிறது. இதன் இலை இரும்புச்சத்தை கொண்டது. இதன் விதைகள் கூடியளவு புரதத்தை கொண்டுள்ளது. எமது நாளாந்த உணவை நிறை உணவாக்க மரக்கறி வகைகளும் உட்கொள்ளப்பட வேண்டும். நமது மக்கள் பொதுவாக தக்காளிப்பழம், கரட், பீட்ரூட், பூசணிவகை, பாகற்காய், கீரை வகைகளை உட்கொள்கிறார்கள். இவற்றுள் தக்காளி பழத்தில் விற்ரமின் ஏ, சீ உண்டு. கரட்டில் விற்ரமின் ஏ உண்டு. கரட்சாறு சிறு

## திருமதி டாக்டர் மகேந்திரன்

சிரேஷ்ட விரிவுரையாளர்-யாழ் மருத்துவபீடம்

நிரம்பியகொழுப்பமில பெறுதி ஆகும். உடலிற்கு தேவையான நிரம்பாத கொழுப்பமிலங்களின் பெறுதிகள் (U. S. F. A.) இதில் காணப்படுவதில்லை (Linoleic, Linolenic) இக்கொழுப்பமிலங்களின்பெறுதிகள் சோயா எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெய் போன்றவற்றில்

குழந்தைகட்கு கொடுப்பது சிறந்தது.

பொதுவாக எமது 3 நேர உணவிலும் மிளகாய் வெங்காயம் சேர்க்கின்றோம். மிளகாய் விற்ரமின் ஏ. விற்றமின் சீ யை கொண்டுள்ளது. எல்லா மரக்கறிகளிலும் விலை குறைவானதும் எளிதில் பயிரிடக்கூடியதும் ஊட்ட சத்து நிறைந்த

## உறவாகிப் போனவள்

அன்னை பூமியிலே
அதர்மம் முடிசூடிக் கொண்டது
துப்பாக்கியும் வாள்களும்
செங்கோல்களாயின .....
தமிழர் தம் குருதியே
சோமபானமானது .....
இருண்டிருந்த தேசத்திலே
காவிய நாயகியாக
எங்கள் கண்ணில் தெரிந்தாள்
பூபதி அம்மா!

தந்திரமாய் நடமாட சிலர்
தருணம் பார்த்த வேளையிலே
சுதந்திரமாய் வாழ படைதிரட்ட
புறப்பட்ட புயல்!
எங்கள் வழிகாட்டிக்கு
இலட்சணங்களை விட
இலட்சியங்களே வேண்டியிருந்தன
வைரங்களை விட
வைராக்கியங்களே போதுமாயிருந்தன.

அந்தப் புரங்களிலே
அழுதுகொண்டிருந்த அபலைகளை
எல்லைப் புறங்களிலே
போர்ப் பரணி
பாடவைத்தவள்
எங்கள் "அன்னை"...!
அவள் நினைத்திருந்தால்
உல்லாசத் தேரேறி
ஊர்வலம் போயிருக்கலாம்
தேரோட்டத்தைவிட
போராட்டமே
அவளுக்குப் பிடித்திருந்தது.

- வினோ

காணாமற் போனோரை மீட்க கோரி

## வவுனியா பொலிஸ் நிலையம் தமிழ்த் தாய்மார் முற்றுகை

(வவுனியா)

காணமல் போய்விட்ட தங்கள் பிள்ளைகளை மீட்டுத் தரும்படி கோரி தமிழ்த் தாய்மார்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்ட சம்பவம் ஒன்று கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்றது.

சமீபத்தில் வவுனியா நகரில் இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளிலிருந்து சுமார் இருபது இளைஞர்கள் காணாமல் போய்விட்டனர். இச் செய்தி வெளிவந்தவுடன் வவுனியாநகரமேபரபரப்பாகியது. எங்கும் பதற்றம்நிலவியது

குறிப்பிட்ட இருபது தமிழ் இளைஞர்களில் பலர் இரவு நேரத்தில் இராணுவ வாகனத்தில் வந்தவர்களினால்தான் கடத்தப்பட்டுள்ளனர்.

தமது பிள்ளைகளைப் பறி

முற்றுகையிட்டு உடனடியாக தமது பிள்ளைகளை விடுதலை செய்யும்படி கோரியுள்ளனர்.

இந்த தமிழ் இளைஞர்கள் காணாமல் போய்விட்ட சம்பவத்திற்கும் தமக்கும் சம்பந்தமில்லை எனத் தெரிவித்த பொலிஸார் இதுபற்றி தாம் விசாரணை செய்வதாகத் தெரிவித்துள்ளனராம்.

பிந்திக்கிடைத்த தகவல்ஒன்றின்படி கைது செய்யப்பட்டு காணாமல் போய்விட்டவர்களில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் அடங்குவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா இராணுவத்தில் உள்ள விசேட புலனாய்வுப் பிரிவினரே இந்த இளைஞர்

இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்து விடுபட்ட பின்னர் இனப்பிரச்சினை தொடர்பாக ஏற்பட்ட உடன்பாடுகள், வட்ட மேசை மாநாடுகள், சர்வகட்சிக் கூட்டங்கள், பாராளுமன்றத் தெரிவுக் குழு என இனப்பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகள், முடிவுகள் எவையும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எதையும் காணவில்லை. இதற்கும் மேலாக இனப்பிரச்சினை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் இந்திய அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தினாலும், அதைத் தொடர்ந்து வந்த இந்திய இராணுவத்தினாலும் கூட இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியவில்லை.

இவ்வாறான சகல முயற்சிகளும் தோல்வியில் முடிவுற்றமைக்குப் பௌத்த பீடங்கள் பெரும் பங்காற்றியுள்ளன. இப்பௌத்த பீடங்கள் தமிழ் மக்களை எப்பொழுதுமே இந்நாட்டின் பிரஜைகளாகவோ, சம அந்தஸ்து உடையவர்களாகவோ பார்க்கவில்லை. தமிழ்மக்கள் விடயத்தில் கௌதம புத்தரின் போதனைக்கு முற்றிலும் எதிரான விதத்திலேயே பௌத்த பீடங்களும், பீடாதிபதிகளும் பிக்குகளும்நடந்து கொண்டனர். கடந்த காலத்தில் இனக்கல வரங்களுக்கு பௌத்த பிக்குகளே தலைமை தாங்கியும் உள்ளனர்.

தற்பொழுது ஜனாதிபதி பிரேமதாசா வோ தெரிவுக் குழுவின் இறுதி அறிக்கை வெளிவந்த பின் அதனைப் பரிசீலனை செய்து அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு ஓர் இறுதி முடிவை அறிவிக்கும் எனவும், அது மாகாண சபைத் தேர்தலின் போது மக்களின் முன்வைக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படும் எனவும் பேசி வருகின்றார்.

இந்நிலையில் இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்றே இல்லை என்ற மகாநாயக்கர்களின் அறிவிப்பானது எதற்காக வெளிவந்தது என்பது கேள்விக்குரியதொன்றாகும். இலங்கையில் இனப்பிரச்சினை எதுவுமில்லை. இது தொடர்பாக இந்தியா எதுவும் பங்களிக்க வேண்டிய அவசியம் இல்லை என இந்தியத் தூதுவருக்குக் கூறப்பட்டதா? அல்லது இனப்பிரச்சினை என எதுவுமில்லை எனவே பிரச்சினைத் தீர்வு குறித்து எதுவித முயற்சியும் மேற்கொள்ளத் தேவையில்லை எனப் பிரேமதாசாவிற்கு அறிவுறுத்தப்பட்டதா? அல்லது வடக்கு கிழக்கில் நடைபெறும் ஆயுதப் போராட்டத்திற்குப் புதிய விளக்கம் கொடுக்கவும் பிரேமதாசா அரசாங்கம் இனப்பிரச்சினையில் எவ்வகையான அணுகுமுறையைக் கையாள வேண்டும் எனக் கொடுக்கப்பட்ட ஆலோசனையா? இதில் எதுவாக இருப்பினும் அவை இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண பௌத்த பீடம் தயாராக இல்லை என்பதை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. சுருங்க கூறின் இரத்த ஆறு தொடர்ந்தும் இலங்கையில் ஓட வேண்டும் என்பதே பௌத்த பீடத்தின் விருப்பமாகும்.

...குறைக்கப்படுகிறது. தவிடு நீக்கிய அரிசியில் விற்ரமினின் அளவு மிகவும் வெகுவாக குறைக்கப்படும். யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் விலைவாசி உயர்வு காரணமாக பங்கீட்டுக்கு வழங்கும் வெள்ளை அரிசியை தமது பிரதான காபோவைதரேற்று உணவாக உட்கொள்கிறார்கள். இதில் காணப்படும் புரதம் மற்றும் விற்றமின் அளவு மிகவும் குறைவு. நாம் வழமையாக உட்கொள்ளும் குத்தரிசி (Parboiled-rice) நிறைந்ததாகும். இதற்கு நாம் நெற்செய்கையை தூண்டுவதற்குரிய வழிமுறைகளை செய்யவேண்டும். நல்ல இன விதை நெல்லை தெரிந்து எடுப்பதுடன் பயிரிடப்படாத வெறும் வயற்காணிகளைநெற்செய்கைக்கு உகந்த நிலமாக்கி நெற் செய்கையை கூட்டுவதற்கு வழி செய்ய வேண்டும். இதற்கு செயற்கை உரம் போட இயலாத பட்சத்தில் மாடுகளின் வளர்ப்பை கூட்டி அதில் இருந்து பெறும் சாணம் மற்றும் குப்பை இலை குழைகளை பசளையாக பயன்படுத்தலாம்.

நிறைஉணவு என்று நாம் கருதும் போது சோற்றை மட்டும் உண்பது நிறை உணவு ஆகாது. அரிசியுடன் வேறு தானியவகைகள்(விலங்குபுரத/தாவர புரதஉணவுகள், பச்சை மரக்கறி பழவகைகளையும் சேர்த்து நிறை உணவாக்கப்படவேண்டும், அரிசியில் காணப்படும் புரதத்தில் ''லைசீன்'' எனப்படும் அமினோ அமிலம் காணப்படுவதில்லை, இவ் குறைபாடு அரிசியை தானியங்களுடன் சேர்த்து உண்ணும் போது நீக்கப்படும் மாப்பொருள் உணவாக மரவள்ளி கிழங்கு வற்றாளை / உருளை கிழங்கு போன்றவற்றையும் மக்கள் உண்ணுகிறார்கள் மரவள்ளிகிழங்கு 50—75 வீதம் நீர் 1 வீதம் புரதம் 20 வீதம் காபோவைதரேற்றையும் கொண்டுள்ளது. இதில் காணப்படும் இலிப்பிட்டுகளின் அளவு புறக்கணிக்கத்தக்கது. இதன் போசாக்கின் அளவு நாட்டரிசியுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவு. அத்துடன இதில் மரவள்ளிகிழங்கு சேர்ந்த சயனைட்கிளைக்கோசைட்டும் உண்டு.

ஆகும். உடலிற்கு தேவையான நிரம்பாத கொழுப்பமிலங்களின் பெறுதிகள் (U. S. F. A.) இதில் காணப்படுவதில்லை (Linoleic, Linolenic) இக்கொழுப்பமிலங்களின்பெறுதிகள் சோயா எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெய் போன்றவற்றில் உள்ளது. இவற்றை உண்பதால் பெறப்படும் நிரம்பாத கொழுப்பமிலங்களினால் உடலிற்கு பல நன்மைகள் உண்டு. முக்கியமாக இதயநோய்கள் வருவதை தடுக்கின்றன. அரிசியை பிரதான உணவாக உட்கொள்ளும் மக்கள் நாளாந்தம் 30—70 கிராம் (அவரை) வகைகளை உட்கொள்ள வேண்டும். ஏறக்குறைய 70 வகையான அவரைக் குடும்ப தாவரங்கள் உள்ளன. இவை கூடிய புரதச் சத்தைக் கொண்டுள்ளது. இப்புரதத்தில் லைசீன் (Lysine) எனப்படும் அமினோ அமிலம் அதிகமாக காணப்படுகிறது. இவ்அவரை வகைகளை தானிய உணவுடன் சேர்க்கப்படும் போது அவற்றின் சத்துப்பரிமாணம் கூட்டப்படுகின்றது. இதைத்தான் குறைநிரப்பு (Supplementary) உணவு என்பார்கள். உ-ம்தோசைமாவில்அரிசிஉழுந்துடன் சேர்க்கப்படுகின்றது. ஆகவே தோசையின் சத்து வெறும்அரிசிச் சோற்றின் சத்திலும்கூடுதலாக வருகின்றது. இவ்அவரை விதைகள் 20—40 வீதம் புரதம் 60வீதம் காபோவைதரேற்று, 1 — 2 வீதம் கொழுப்பினையும் கொண்டது இக் கொழுப்பு நிரம்பாத கொழுப்பமிலங்களைக்கொண்டது. இதைவிட விற்றமின் பீ, கல்சியம், இரும்பு போன்ற கனியுப்புக்களும் உண்டு.

இவ் அவரை வகையில் சோயா கூடியளவு புரதத்தையும் (40 வீதம்), நிலக்கடலை 25 வீதம் சிறகு அவரை 17-32 வீதம் புரதத்தையும் கொண்டுள்ளது. அவரைக் குடும்ப தாவரங்களின் புரத அளவு விலங்கு புரதங்களிலும் கூடுதலாக இருப்பினும் இவற்றின் தரம்(Quality)சிறிது குறைவாகவே உள்ளது. அவரைக்குடும்ப தாவர பதார்த்தங்களில் சில நஞ்சுப்பதார்த்தங்கள் காணப்படுகின்றன. இவை கடலை / சோயா பதனிடும் போது நீக்கப்படுகின்றது. கூடி...

சிறந்தது.

பொதுவாக எமது 3 நேர உணவிலும் மிளகாய் வெங்காயம் சேர்க்கின்றோம். மிளகாய் விற்ரமின் ஏ, விற்றமின் சீயை கொண்டுள்ளது. எல்லா மரக்கறிகளிலும் விலை குறைவானதும் எளிதில் பயிரிடக்கூடியதும் ஊட்ட சத்து நிறைந்ததுமான பச்சை நிற கீரை வகைகளாகும். முளைக்கீரை, பொன்னாங்காணி, வல்லாரை, முருங்கை இலை போன்ற பச்சை கீரைவகை கட்டாயமாக உணவில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இது விற்றமின் ஏ. சீ. போலிக் கமிலம் விற்றமின் பீ போன்றவையும் கல்சியம், இரும்புச் சத்துபோன்ற கனியுப்புக்களையும் கொண்டுள்ளது. இவ் இலைகளில் காணப்படும் புரத அளவு குறைவு. ஆனால் லைசீன் எனப்படும் அமினோ அமிலம் கூடுதலாக உள்ளது,

பீட்ரூட், பூசணிவகை (மஞ்சள் பூசணி தவிர) புடோலங்காய். சுரைக்காய்போன்ற மரக்கறி வகைகள் 90வீதம் நீரையும் மிகவும் குறைவான சத்துக்களையும் கொண்டுள்ளது. ஆனால் இவற்றினை இலகுவாக பயிரிடமுடியும். இவ் தாவர உணவுவகைகளை விட விலங்கு புரதங்களான பால், இறைச்சி, முட்டை, மீன் போன்றவற்றை தமது உணவில் சேர்த்துக்கொள்வது இன்றியமையாதது. இவற்றின் சத்துக்கள் தாவர உணவை விட சிறந்தது. ஆனால் விலை அதிகம். உள்ளூர் உற்பத்தியில் கோழி உற்பத்தி, பாற்பண்ணைகளை பெருக்குவதால் இவற்றைநாம் பெற்றுக்கொள்ளலாம்,

பழவகைகள் எமது நாளாந்த உணவில் கட்டாயம் சேர்க்கப்பட வேண்டும். உதாரணம் பப்பாசிப்பழம், மாம்பழம் என்பவை விற்றமின் ஏ, சீ போன்றவற்றை அதிகளவில் கொண்டுள்ளது தோடை, எலுமிச்சை நெல்லியில் மிக அதிகளவான விற்றமின் சீ உள்ளது.

சத்துணவை மனதில் கொள்ளுமிடத்து தக்காளி, மிளகாய், வெங்காயம், கரட், பச்சைக் கீரை வகைகளின் உற்பத்தியை கூட்டி அவற்றின் விலைவாசியை குறைக்கும் இடத்து மக்களை பலவித நோய்களில் இருந்து காப்பாற்ற முடியும்.

இச்செய்தி வெளிவந்தவுடன் வவுனியாநகரமேபரபரப்பாகியது. எங்கும் பதற்றம்நிலவியது

குறிப்பிட்ட இருபது தமிழ் இளைஞர்களில் பலர் இரவு நேரத்தில் இராணுவ வாகனத்தில் வந்தவர்களினால்தான் கடத்தப்பட்டுள்ளனர்.

தமது பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர் நகரில் உள்ள பொதுஇடங்களில் வேதனை தாங்கமுடியாமல் பெரிதாக வாய்விட்டு அழுதுள்ளனர். இதன் பின்னர் பெற்றோர் அனைவரும் இணைந்து பொலிஸ் நிலையத்தை காணாமல் போய்விட்டவர்களில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் அடங்குவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா இராணுவத்தில் உள்ள விசேட புலனாய்வுப் பிரிவினரே இந்த இளைஞர்களைக் கடத்தியுள்ளனர் என்று அறியப்பட்டது. காணாமல் போய்விட்ட இளைஞர்களின் கதியை அறிய முடியாமல் அப்பாவிப் பெற்றோர்கள் அலைந்து திரிகின்றனர் (தி)

காரைநகரில்

## நிவாரணம் தவிர வேறு வருமானம் எதுவுமில்லை

[வவுனியா]

காரைநகரில்சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் சிக்கிய ஏழு தமிழ்க் குடும்பங்களின் தாய்மார்கள் கப்பல் மூலமாக திருக்கோணமலை வந்திறங்கி தரைமார்க்கமாக யாழ்ப்பாணம் பயணமானார்கள்.

வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் இந்தத் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள் மற்றும் உறவினர்களைச் சந்திப்பதற்காக யாழ். நகரம் நோக்கி பயணமானார்கள்.

யாழ். செல்லும் வழியில் வவுனியாவில் ஈழநாதம் செய்தியாளரிடம் அவர்கள் தமது வேதனை வாழ்க்கையை விபரித்தனர்.

நிவாரண உணவுப் பொருள்களை தவிர தமக்கு வேறு எந்த வரும்படியும் இல்லை என்றும் பணக்கஷ்டத்தினால் தேங்காயைப் பிழிந்து எண்ணெய் ஆக்கிப் பிழைத்துவருகிறோம் என்றும் -

மருத்துவ வசதியீனத்தால் கர்ப்பிணித் தாய்மார்கள் பெரும் கஷ்டத்தை எதிர்கொண்டுள்ளனர் என்றும் -

யாழ். நகரம் சென்று எமது பிள்ளைகளுடன், உறவினர்களுடன் நிலையாக தங்கிவிடுவதே எமது நோக்கம் என்றும் -

நாம் கப்பற்படையின் பயணிகள் கப்பலிலேயே திருக்கோணமலையில் வந்து இறங்கினோம். எம்முடன் கொழும்பு செல்லும் பயணிகளும் வந்திறங்கினர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். [தி]

## அவசரகால விதி அமுல் இங்குபோல் எங்குமில்லை

(கொழும்பு)

உலகின் எந்த நாட்டிலும் நடைமுறையில் இல்லாத மிகவும் கடுமையான அவசரகால விதிகள் இங்கு தான் அமுல் நடத்தப்படுகின்றன. அதிலும் இவ்விதிகள் யாவும் வடக்கு, கிழக்கு மாகாணத்திலேயே முக்கியமாக அமுல்படுத்தப்படுகின்றன என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், அவசரகால விதிகளில் அரசாங்கம் கொண்டு வந்துள்ள மாற்றங்களின் அடிப்படையில் இராணுவ பொலீஸ் சுற்றிவளைப்புகளில் கைது செய்யப்படுபவர்கள் பற்றி கைது செய்யும் அதிகாரிகள் ரசீது ஒன்றைத்தரவேண்டும். எனவே படையினரால் ஒருவர் கைது செய்யப்பட்டால் அதற்கான ரசீதை கைதானவரின் உறவினர்கள் படை அதிகாரியிடமிருந்து கேட்டுப் பெற வேண்டும் என்றும் இதற்காக எவருக்கும் அஞ்சத்தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஈழநாதம்

# ரயில்பாதை விஸ்தரிப்பு; தமிழர் காணிகள் பறிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இருந்து பொத்துவில் வரையான ரயில் பாதை விஸ்தரிப்பினால் ஏராளமான தமிழ்க் குடும்பங்கள் வீடுகளையும், காணிகளையும் இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு–பொத்துவில் ரயில்பாதை விஸ்தரிப்பு சம்பந்தமான வரைபடத்தின்படி முஸ்லிம் கிராமங்களூடான ரயில்பாதை கடற்கரையோரமாக அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கும் அதேசமயம் தமிழ்க்கிராமங்களூடான ரயில் பாதைகள் குடிமனைகளூடாக ஊடறுத்துச் செல்லுமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

ஒந்தாச்சிமடம், களுவாஞ்சிக்குடி, கோட்டைக்கல்லாறு, கல்லாறு, பெரியநீலாவணை போன்ற கிராமங்களில் அதிகமானோர் இவ்விதம் இருப்பிடங்களை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக போக்குவரத்துத்துறை அமைச்சர் விஜேபால மெண்டிசிடம் பல தமிழ்க் கிராமங்களின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழு ஒன்று உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளது.

## கைலாசபதி கலையரங்கில் சுகாதாரக் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சுகாதாரநிலையம் மாணவர்களினதும், பணியாளர்களினதும் நன்மைகருதி தொடர்ச்சியான கருத்தரங்குகளை நடாத்த தீர்மானித்துள்ளது. இக்கருத்தரங்கு எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாக இருக்கும் இக்கருத்தரங்கில்,

''இன்றைய போர்க்கால சூழ்நிலையில் நோயாளிக்கு இரத்தம் ஏற்றவேண்டிய அவசியமும் அதற்கான இரத்த தானத்தின்அவசியமும்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறும்.

டாக்டர் சீர்மாறன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் விசேட விருந்தினராக துணைவேந்தர் அ. துரைராஜா கலந்து கொள்கின்றார். இங்கு ''சத்திரசிகிச்சையில் இரத்தம் கொடுத்தலின் முக்கியத்துவம்'' பற்றி டாக்டர் எம். கணேசரத்தினமும், ''மருத்துவத்தில் சில நோய்களுக்கு இரத்தம் ஏற்றப்படுதலின் அவசியமும் இரத்தப் பற்றாக்குறையினால் ஏற்படும் பிரச்சினைகளும்'', நிபுணர்-திருமதி- நாகேந்திராவும், ''கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மகப்பேற்றின் போது இரத்தம் ஏற்றபடுதலின் அவசியமும் வங்கியில் இரத்தம் இல்லாநிலமையின் அவசியமும் மகப்பேற்று நிபுணர் - சிவபாலன் அவர்களும் ''ஏன் இரத்த வங்கியில் போதியளவுஇரத்தம் எப்போதும்கிடைப்பதில்லை?- டாக்டர் திருமதி ராஜராஜேஸ்வரனும்''இன்றைய சூழ்நிலையில் இரத்த தானத்தின் அவசியம்'' டாக்டர் சின்பாவும் மற்றும்பேராசிரியர்சி.சிவஞானசுந்தரம்அவர்கள் ''இன்றையசூழ்நிலையில்இரத்ததானம்செய்ய தயங்குவதால் சமூகத்திற்கு ஏற்படும் ஆபத்தும்மூடநம்பிக்கைகளும்'' என்கின்ற தலைப்புகளில் உரையரங்குகள் இடம் பெறவுள்ளன.

## விசித்திர கோழிக்குஞ்சு

(யாழ்ப்பாணம்)

நாலு கால்கள் இருதலைகளுடன்விசித்திரக்கோழிக்குஞ்சு ஒன்று உரும்பராய் கரந்தன் பகுதியில் உள்ள வீடொன்றில் பொரித்துள்ளது.

இவ் அதிசயக் கோழிக்குஞ்சு பொரித்தவுடன் இறந்துவிட்டது. தற்பொழுது அது உரும்பராய் இந்துக்கல் லூரியின்

## மோட்டார் சைக்கிளுக்கு புதிய நிபந்தனை

(கொழும்பு)

வவுனியாவில் மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர் தமது மோட்டார் சைக்கிள் உடன் சேர்ந்து புகைப்படம் பிடித்து வவுனியா பொலீஸாரிடம் ஒப்படைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொலீஸார் இது

...ரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பொலீஸாரிடம் பதிவு செய்தவர்கள் மட்டுமே நிரந்தர குடியிருப்பாளர்களாக வசிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வீரவணக்க கூட்டம்

[வடமராட்சி]

கரவெட்டி வட்டத்தில் 3-ஆம் மாதத்தில் வீரச்சாவெய்திய மூன்று மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் திரு. இ. தயா தலைமையில் நெல்லியடி முருகன் ஆலய முன்றலில் இன்று இரவு 7-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் நினைவுப் பேருரையும், கலை பண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

[யோ]

## கிளிநொச்சியில் அன்னை பூபதி நினைவு

தியாகச்சுடர் அன்னைபூபதியின் 5-ம் ஆண்டு நினைவு நாள் கிளிநொச்சியின் பலபகுதிகளிலும் சிரத்தையுடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. வீடுகள், பொது மைதானங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள் போன்றவற்றின் முன் அன்னை பூபதியின் உருவப் படம் வைக்கப்பட்டு மலர்களால் அலங்கரிக்கப்பட்டு அணையா தீபத்துடன் சுழற்சி முறை உண்ணா விரதம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(16)

# வவுனியா நகரை ஆக்கிரமிக்க சிறிலங்கா அரசு புதிய திட்டம்

## தாண்டிக்குளத்தில் நகர் அமைக்க முயற்சி

(வவுனியா)

தற்போதுள்ள வவுனியா நகரத்தை முற்று முழுதாகச் சிங்கள மயப்படுத்தும் நோக்குடன் தாண்டிக்குளம் பகுதியை நகரமாக்குவதற்குச் சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டிருப்பது தெரியவந்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் எல்லைப் புறப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து சென்றுள்ள சிங்கள மக்களையும் தென்பகுதியில் வீடு, வாசல்களற்று நிராதரவாக வாழும் சிங்கள மக்களையும் தற்போதுள்ள வவுனியா நகரின் பொது இடங்களில் குடியேற்றம் செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் வவுனியா மாவட்டத்தில் சிங்கள மக்களின் தொகையை அதிகரிக்கச் செய்வதற்கு அரசு முனைவதாக அறிய வருகின்றது.

வவுனியா - யாழ். வீதியில் விவசாயப் பண்ணைக்கு அருகாமையில் உள்ளநாவற்குளம் என்ற பகுதியிலேயே புதிய நகரம் அமையும் என்று தெரிவிக்கப்பட்டது. இங்கு ஏப்ரல் முதலாம் திகதி சந்தையும், கடைகளும் செயற்படத் தொடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வடபகுதியிலிருந்து செல்லும் தமிழ் மக்கள் தாண்டிக்குளத்துடன் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் முகமாக பஸ் நிலையம், அரசாங்க செயலகங்கள் போன்றவையும் திறந்து செயல்பட வைக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

புதிதாகச் சிங்களக் குடியேற்றங்கள் செய்து தமிழரின் நிலங்களை அபகரிப்பதோடல்லாமல் தமிழ் மக்களை முற்றாக விரட்டியடிப்பதற்கே அரசு முனைகிறது என அரசாங்க ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

ஈரற்பெரிய குளம், தவசிகுளம் மூன்று முறிப்பு, தோணிக்கல், தேக்கங்காடு ஆகிய பகுதிகளில் உள்ள தமிழ் மக்கள் முன்னர் விரட்டியடிக்கப்பட்டமை தெரிந்ததே

## சிவத்தமிழ் செல்விக்கு சர்வோதய விருது

# ஜெயலலிதாமீது ஊழல் குற்றம் சுமத்திய காங்கிரஸ்உறுப்பினர்மீது சட்டசபையில் தாக்குதல்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையில் ஜெயலலிதா அரசின் ஊழலை நிருபிப்பதாககூறி அதற்கான ஆவண ஆதாரங்களை பேரவை சபாநாயகரிடம் காட்ட எழுந்துசென்ற காங்கிரஸ் உறுப்பினர் செல்லகுமார் நேற்று பேரவையில் வைத்தே தாக்குதலுக்கு உள்ளானார்.

இவர்மீது திடீரென எழுந்து சென்று தாக்குதல் நடத்திய சுயேட்சை உறுப்பினர் தாமரைகனியை நோக்கி காங்கிரஸ் உறுப்பினர்கள் பதில் தாக்குதல் நடத்த விரைந்த போது தாமரைகனி பேரவை காவலர்களால் பாதுகாக்கப்பட்டு சபையிலிருந்து வெளியே அனுப்பப்பட்டார்.

இதை ஆட்சேபித்து சபையின் நடுவே விரைந்து அங்கு நின்று கோஷமிட்ட நான்கு காங்கிரஸ் உறுப்பினர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இதை கண்டித்து நேற்று காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்டசபையை விட்டு வெளியேறினர்.

பேரவை வளாகத்தின் வெளியே நின்று அராஜக ஆட்சி ஒழிக என காங்கிரஸ் உறுப்பினர்கள் மாறிமாறி கோஷமெழுப்பினர். இதே சமயம் தாக்குதல் நடத்திய தாமரைகனியை ஒரு வாரம் சபை நடவடிக்கையில் கலந்து கொள்ள சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா தடைவிதித்தார். அடிபட்ட உறுப்பினருக்காக ஆட்சேபம் எழுப்பிய காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவரையும் கூட்டதொடர் முடிவடையும் வரை கலந்து கொள்ள தடைவிதித்தார். இச் சம்பவங்கள் முடிந்த பின் ஜெயலலிதா சபையை விட்டு வெளியே சென்றார்.

## சுப்பிரமணியம் சுவாமி அனுப்பிய ஜெயலலிதா மீதான மனு தேர்தல் கமிஷனரிடம்

[சென்னை]

ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டமைக்காக ஜெயலலிதா சட்டப்பேரவை பதவி வகிக்க தகுதியற்றவர் என்று கூறி சுப்பிரமணியம்சுவாமி தமிழக ஆளுநருக்கு அனுப்பிய மனு ஆளுநரால் தேர்தல் கமிஷனுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் நேற்று அறிவித்தார்.

இதேசமயம் சுப்பிரமணியம் சுவாமியின் மனு தேர்தல் கமிஷனுக்கு அனுப்பப்பட்டுள்ளதால் தார்மீக அடிப்படையில் ஜெயலலிதா பதவி விலக வேண்டும் என சுப்பிரமணியம் சுவாமி தலைமையிலான தமிழக நல்லாட்சி இயக்கம் கோரியுள்ளது. இதனிடையே டில்லியில் நேற்று செய்தியாளர்களிடையே பேசிய சுப்பிரமணியம் சுவாமி, 'தமிழக சட்டப்பேரவையை கலைக்காது நிறுத்தி வைத்து ஜனாதிபதி ஆட்சியை மாநிலத்தில் அமுல் செய்யும் படியும் கோரிக்கை விடுத்தார்.

சுப்பிரமணியம்சுவாமியின் மனுமீது தேர்தல் கமிஷன் எவ்வித தாமதமுமின்றி உடனடி முடிவை எடுக்குமாறும், ஆளுநர் தாமதமாக இந்த மனுவை தேர்தல் கமிஷனுக்கு அனுப்பியபோதும், அனுப்பியது குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாக வாழப்பாடி இராமமூர்த்தி நேற்று கருத்து தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஆரோக்கியநாதர் லூர்துமலர் (லில்லிப்பூ)

மாதகலைச் சேர்ந்தவரும், விசுவமடுவில் வசித்தவருமான ஆரோக்கியநாதர் லூர்துமலர் (லில்லிப்பூ) 22-3-93-ல் காலமானார். இவர் ஆரோக்கியநாதரின் அன்பு மனைவியும், யோசவ் பெர்னான்டோ (ஜெயம்) மேரி ஆன் சசிகலா (கலா) ஆகியோரின் தாயாரும், ஜெக்குலின் ஜொய்சி அல்பேட் (திலகர்) ஆகியோரின் மாமியாரும், சின்னத்துரை செல்லம்மாவின் மகளும், ஞானம்மா, அன்னமேரி ஆகியோரின் சகோதரியும், யூஜினிகிறேஸ், யோகா ஆகியோரின் சிறியதாயுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 22-3-93 கிளிநொச்சி சென் திரேசா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மாதகல். (சி/6290) சூ பி. ஆரோக்கியநாதர்

### பரமு கையிலாயபிள்ளை

வைக்கப்பட்டுள்ளது. [பா]

பிறப்பித்துள்ளனர். படையின

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்
நல்லூர்ப் பிரிவு

## அதிஷ்டலாப சீட்டிழுப்பு

28-03-1993இல் இழுக்கப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்ற சீட்டுகளின் விபரம்:

| | | |
|---|---|---|
| 01. 2338 | 02. 2266 | 03. 4118 |
| 04. 4615 | 05. 4798 | |

பரிசுக்குரியவர்கள் 30-04-93க்கு முன் நல்லூர்ப் பிரிவுப் பணிமனையில் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்துப் பரிசுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளவும்.

73. கண்டி வீதி, செஞ்சிலுவைச் சங்க சேவையில்
யாழ்ப்பாணம். கௌரவ செயலாளர்.
29-03-1993. (சி/6291)

## தவறிவிட்டது

1993-03-28 ஆம் திகதி இரவு ஆலங்கேணித் துறையில் பிறவுண் நிறத்திலான 'சூட்கேஸ்' தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள கடையில் அல்லது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

[4593] திருமதி தி. கனகம்மா

## பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 03-04-1993 முதல் 05-06-1993 வரை சனிக்கிழமை தோறும் நடைபெற இருக்கின்ற ''சுகவாழ்வு'' பொது விரிவுரைத் தொடரில் தவறாது பங்குபற்றும்படி சகல பாலர் பாடசாலை ஆசிரியைகளையும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேலதிக விபரங்களுக்கு திரு. இரா. சிவச்சந்திரன் (இணைப்பாளர் புறநிலைப் படிப்புகள் அலகு, யாழ். பல்கலைக் கழகம்) அவர்களோடு தொடர்பு கொள்ளவும்.

சுந்தரம் டிவகலாலா,
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
[சி-6292] யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம், இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம்ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

(கொழும்பு)

சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 1993 ஆம் ஆண்டு சர்வோதய விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். சர்வோதய நம்பிக்கை நிதியம் இதனை அறிவித்துள்ளது

மனித முன்னேற்றம், அபிவிருத்தி மற்றும் சமாசத்துக்கு உழைத்தவர்களுக்கே இந்த விருது சர்வோதயத்தால் வழங்கப்படுவது வழக்கம்.

தங்கம்மா அப்பாக்குட்டி, கத்தோலிக்க மதகுரு திஸ்ஸ பாலசூரியா, பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திரா உட்பட ஒன்பது பேருக்கு சர்வோதய விருது வழங்கப்படுகிறது.

ஏப்ரல் 2ஆம் திகதி பி. ப. 2 மணியளவில் மொறட்டுவ சர்வோதய விஸ்வசமாதி மண்டபத்தில் இடம்பெறவுள்ள விழாவில் ஞாபகார்த்த விருது, நினைவுக் குறிப்பு மற்றும் 50,000 ரூபா பண முடிப்பும் வழங்கி விருதுக்குரியவர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

### துப்பாக்கி

நிலைகளிலிருந்து நேற்று முன்தினம் இரவு 9.25 மணியளவில் சுழிபுரம் பகுதி மக்கள் குடியிருப்புக்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டனர். இச் சம்பவத்தில் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரியவருகிறது.

மேலும் சிறிலங்கா விமானப் படையினரின் வேவு விமானம் ஒன்று நேற்றுக்காலை 10.25 மணியளவில் சங்கானை, சித்தன்கேணி, தொல்புரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய பகுதிகளுக்கு மேலாகப்பறந்து மக்கள் குடியிருப்புக்களை நோட்டம் இட்டுச் சென்றது. (41)

### வவுனியாவில்

'இது அரசாங்கத்தின் சார்புள்ள ரகசிய ஆயுதக்குழு செய்யும் வேலை எம்மால் எதுவுமே செய்ய முடியாது' என்று பொலிஸ்அதிகாரி ஒருவர் பெற்றோர்களிடம் கையைவிரித்துள்ளார். (தி)

### அடையாள

மேற்கூறியவற்றில் ஏதவாது ஒன்று கைவசம் இல்லாதவர்கள் தபால் அடையாள அட்டையேனும் உரிய நேரத்தில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கையைமேற்கொண்டு ஆவன செய்யும்படியும், எக்காரணம் கொண்டும் நிழற்படப் பிரதிகள் உறுதிப்படுத்திக் கொடுக்கப்படமாட்டாது என்பதையும் கருத்தில் கொள்ளும்படி யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் பரீட்சார்த்திகளின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார். (பா)

### குருபூசை

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் நல்லைக்குருமணி (மணிஐயர்) அவர்களின் 12ஆவது குருபூசை தினம் இன்று காலை 8.00 மணிக்கு குருமூர்த்த ஆலயத்திலும், பின் ஆதீனகலாமண்டபத்திலும் இடம் பெற்று பஞ்சமுக அர்ச்சனையும், தீபாராதனைகளும் இடம்பெறும்

நண்பகல் அன்னதானமும் இடம்பெறும்.

பிற்பகல் 4.00 மணிக்கு நல்லைக் குருமணியின் ''வாழ்க்கை வரலாறு'' நூல் வெளியீட்டு நிகழ்வும் நடைபெறும். [24]

மாகாண சபைத் தேர்தல்;

## தப்பி ஓடிய படையினர் குழப்பம் விளைவிக்கலாம்

### அரசிற்கு எச்சரிக்கை

இராணுவத்திலிருந்து அண்மைக்காலமாக விலகி ஓடியவர்கள் எதிர்வரும் மாகாண சபை தேர்தல் நடவடிக்கைகளை சீர்குலைக்காமல் இருக்க தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இராணுவ உயர்பீடத்தை அரசு பணித்துள்ளதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக இராணுவத் தளபதி தேர்தல் நடைபெறவுள்ள ஏழு மாகாணங்களினதும் பிரிகேடியர்களை சந்தித்துப் பேசியுள்ளார். அதேசமயம் தேர்தல் பிரசார காலங்களிலும் படையை விட்டு விலகியவர்களால் குழப்பங்கள் ஏற்படாது தடுக்க உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும்படி பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பிரதமருமான டி. பி விஜேதுங்க இராணுவ உயர்பீடத்தை பணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தை விட்டு விலகியவர்களால் நாசவேலைகள் நடைபெறலாம் என்று இராணுவத்தை உஷார் நிலையில் வைக்கப்படுவது சிறிலங்காவில் இதுவே முதற்தடவை என்றும், இந்த மாகாணங்களில் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான படை அதிகாரிகள் தேர்தல் முடியும்வரை தமது முகாம்களிலேயே தங்கியிருக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்றும் ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

### சீனி இல்லையாம்

இடம் பெயர்ந்தோருக்கான இலவச நிவாரணத்தில் பங்குனிமாத முதல் இரண்டுவார உலர் உணவுப் பொருள்களில் சீனி வழங்கப்படமாட்டாது.

### இலவச

விடுத்துள்ளது. இச் சங்கத்தினர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ள மகஜர் ஒன்றில் மேற்படி கோரிக்கை விடப்பட்டதைத் தொடர்ந்து ஆவன செய்ய முயற்சிப்பதாக அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

[யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர்]

சாவகச்சேரி சப்பச்சிமாவடியைச் சேர்ந்த பரமு கையிலாயபிள்ளை (25-03-93) கொழும்பில் காலமானார்.

இவர் பாக்கியலீலாவின் அன்புக் கணவரும், ராகுலராணி (டென்மார்க்), குணசீலன் (கனடா), பரமராணி, சாந்தசீலன் (ஜெர்மனி), பரமசீலன் (சிங்கப்பூர்) ஆகியோரின் தந்தையும், பஞ்சாட்சரம் முன்னாள் யா/சா, இந்துக் கல்லூரியின் நூலகர், (டென்மார்க்) அவரின் மாமனாரும், சிறிறாம் (டென்மார்க்) இவரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (29-03-93) கொழும்பு ஜெயவர்த்தன மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (30-03-93) கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும். இன்று 30-03-93 அன்னாரின் இல்லத்தில் அஞ்சலி நிகழ்வு நடைபெறும்.

சப்பச்சிமாவடி, தகவல்:
சாவகச்சேரி. மைத்துனன்
[சி-6293] பொ. இராசேந்திரன் (ராசா)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 28-03-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8792

வடபகுதிக்கு உள்ளேவந்த வாகன இலக்கங்கள்:

71-4984, 42-1019. 24-7375, 28-9917, 26-0403, 27-9492, 42-457, 26-8430. 22-5622 26-5814. 27-3910, 28-1311, 27-8283, 41-7297, 27-0853, 28-0523, 42-7975. 42-3726, 42-3615, 26-0535 26-4281, 26-9626. 40-1617. 24-5029.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-6309, 24-9674, 41-4719, 42-9220, 42-3924.

## 29-03-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 1-8797

வடபகுதிக்கு உள்ளேவந்த வாகன இலக்கங்கள்:

24-7299, 22-7271, 28-1414, 22-4862, 26-3390, 28-1085. 24-8700, 27-0089, 26-0502, 22-3887, 24-4957, 41-3331, 41-8557, 24-4465, 28-1635, 42-9885, 26-8839, 27-4023, 26-5846. 24-6941, 42-7312, 40-2295, 41-4176, 42-3329, 27-5845, 22 5294. 26-2414, 40-1688, 27-6821.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-5041, 22-5857, 26-4726, 26-7217, 26-4809.